செ.வெ.எண்.150 நாள்.03.04.2017

## காஞ்சிபுரம் மாவட்டம்

**காஞ்சிபுரம் நகராட்சியில் புராதன நகர மேம்பாடு மற்றும் வளர்ச்சிக் திட்டத்தின் கீழ் நடைபெற்றுவரும் பணிகளை மத்திய நகர்புற வளர்ச்சித்துறை இணை செயலாளர் திரு.ஆனந்த் இ.ஆ.ப., அவர்கள் ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது நகராட்சி நிர்வாக ஆணையர் திரு.ஜி. பிரகாஷ் இ.ஆ.ப., மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பா.பொன்னையா இ.ஆ.ப., ஆகியோர் உடனிருந்தனர்.**

காஞ்சிபுரம் மாவட்டம் கோயில்கள் அதிகமுள்ள புராதன சின்னங்கள் அமைந்துள்ள மாவட்டமாகும். பாரம்பரியமிக்க கலாச்சாரத்தில் பெயர் பெற்ற மாவட்டமாகும். தேசிய பாரம்பரிய நகர மேம்பாடு மற்றும் வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கோயில்களுக்கான பாரம்பரிய பண்பாடு மாறாமல் கோயில்கண் தொடர்புடைய கட்டமைப்பு மீள வைப்பது புறத்தூய்மை வசதிகள், சாலை வசதிகள், பொது போக்குவரத்து மற்றும் தானுந்து நிறுத்தங்கள் தகவல்மையம் ஆகியவை கட்டமைக்கப்படுகிறது. நாடு முழுவதும் 12 நகரங்களில் ரூ.500 கோடி மதிப்பீட்டில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது. காஞ்சிபுரம் ஏகாம்பரநாதர் கோயிலைச் சுற்றியுள்ள சாலைகளை மேம்படுத்துதல் மற்றும் தெருக்களை அகலப்படுத்துதல் பணி ரூ.8.53 கோடி மதிப்பீட்டில் கோயில் அருகில் பெட்டக அறை புராதன தானியங்கி மையம், CCTV கட்டுபாட்டு அறை மற்றும் உதவி மையம் ரூ,15.11லட்சம் மதிப்பீட்டில் நவீன கழிப்பிடம் ரூ.11.75 லட்சம் மதிப்பீட்டிலும் காலனி அலமாரி, குடிநீர் மற்றும் கால் அலம்பும் இடம் ரூ.10.44 லட்சம் மதிப்பிலும் தெருவிளக்கு ரூ.94.64 லட்சம் CCTV கேமரா அமைத்தல் மற்றும் WIFI இணையத்தள இணைப்பு ரூ.4.55 லட்சம் மதிப்பிலும் மேற்கொள்ளப்படவுள்ளது. இதேபோன்ற வரதராஜ பெருமாள் கோயிலை சுற்றியுள்ள சாலைகள் மேம்படுத்துதல் மற்றும் தெருக்களை அகலப்படுத்துதல் ரூ.6.75 கோடி மதிப்பீட்டிலும் இதர பணிகள் ரூ.89.37 லட்சம் மதிப்பிலும் அமல்படுத்தப்படவுள்ளது.

காஞ்சிபுரம் ஏகாம்பர நாதர் கோயிலை மற்றும் ஸ்ரீ வரதராஜபெருமாள் கோயிலைச்சுற்றியுள்ள பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுவரும் சாலைப்பணிகளை இணைச்செயலாளர் பார்வையிட்டார். கோயில்களை சுற்றியுள்ள பகுதிகளில் மழை நீர் செல்லவும் தகவல் தொழில்நுட்பம் தொடர்பான ஒயர்கள் செல்லவும் தனித்தனி வழிகள் சாலையின் ஒரு ஓரத்தில் கான்க்கீரீட் கட்டுமானத்தில் நான்கு வழிகளாக அமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டார்.

பின்னர் இணை செயலாளர் செய்தியாளர்களிடம் தெரிவிக்கையில் நாட்டின் பிராதன சின்னங்கள் அமைந்துள்ள இடங்களில் நகர்புற வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் மத்திய அரசு 12 பிரதான நகரங்களில் மேம்பாடு மற்றும் வளர்ச்சித்திட்டங்களை செயல்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. தமிழ்நாட்டில் காஞ்சிபுரம் மற்றும் வேளாங்கன்னியில் செயல்படுத்த திட்டமிட்டுள்ளது. யாத்திரிகள் மற்றும் பக்தர்களின் வசதிகளை மேம்படுத்தும் வகையிலும் பக்தர்கள் தங்கள் வாகனங்களை தனி வாகன நிறுத்துமிடங்களில் நிறுத்துவதற்கும், கைப்பேசி உள்ளிட்ட அவர்களது பொருட்களை பத்திரமாக வைக்க பாதுகாப்பு அறையும், கழிவறையும், குடிநீர் வசதியும், தெருவிளக்கு வசதியும் புராதன நகரங்களில் பழைய

கலாச்சாரங்கள் மாறாத வகையில் வள்ஞநர் குழுவால் வடிவமைக்கப்பட்டு ஓராண்டுக்குள் அமைக்கப்படும். ஏகாம்பரநாதர் கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் ரூ.8.53 கோடி மதிப்பீட்டில் சாலையின் ஓரத்தில் மழைநீர், கழிவுநீர், மின்சார ஒயர் மற்றும் தகவல் தொடர்பான ஒயர்கள் நான்கு வழிகளில் தனித்தனியாக செல்லத்தக்க வகையில் கான்க்கிரீட் கட்டுமானத்தில் அமைக்கப்பட்டு வருகிறது. வரதராஜபெருமாள் கோயிலைச் சுற்றியுள்ள பகுதிகளில் இப்பணி ரூ.6.74 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும். இத்திட்டம் சிறப்பாகவும், செம்மையாகவும் நடைபெறுவதை ஆய்வு செய்து மேலும் செம்மைப்படுத்தப்படும், மேலும் பக்தர்கள் தங்குவதற்கு வசதியாக தங்கும் விடுதிகள் கட்டுவதற்கு பரிசீலிக்கப்படும் எனத் தெரிவித்தார்.

முன்னதாக இணைச்செயலாளர் பேரறிஞர் அண்ணா நினைவில்லத்திற்கு சென்று அங்கு பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள புகைப்படங்கள் அண்ணா பயன்படுத்திய பொருட்கள், படித்தப்புத்தகங்கள் மற்றும் அண்ணா எழுதிய புத்தங்களையும் பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் காஞ்சிபுரம் சார் ஆட்சியர் திரு.அருண் தம்புராஜ் இ.ஆ.ப., நகராட்சி நிர்வாக மண்டல ஆணையர் திரு.இளங்கோ, காஞ்சிபுரம் நகராட்சி ஆணையர் திரு.சர்தார், உதவி ஆணையர் இந்துசமய அறநிலைத்துறை திருமதி.இரமணி மண்டல நகராட்சி பொறியாளர் திரு.முருகேசன் மற்றும் நகராட்சி பொறியாளர்கள் அரசு அலுவலர்கள் பணியேற்றனர்.